**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 14/மா/2022**

**நாள் : 16.3.2022**

திரு. S. கார்த்திக் (எ) ஷேக்தாவூத்,
அரவானூர், திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மருதாண்டக்குறிச்சி அஞ்சல், அரவானூர், புதுக்காலனி, எண்.1/145ல் வசிக்கும் திரு. S. கார்த்திக் (எ) ஷேக் தாவூத் என்பவரின் 22.1.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.1.2022-ல் பெறப்பட்டு 14/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மருதாண்டாக்குறிச்சி அஞ்சல், அரவானூர், புதுக்காலனி, எண்.1/145ல் வசிக்கும் திரு. S. கார்த்திக் (எ) ஷேக் தாவூத் என்பவர் தன்னுடைய 22.1.2022 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“கடித எண்.364/21 நாள்: 22.2.2021-ம் தேதி முறையாக தங்கள் இடம் புகார் மனு பெற்று R.P.A.D.-யில் சுகாதார சீர்கேட்டை பற்றி புகார் அனுப்பி, அதன் பின்னர் தங்களின் உத்தரவின் பேரில் மாநகராட்சி அதிகாரிகள், இங்கு குப்பை கொட்டுவதையும், ராட்டி தட்டுவதையும் தடை செய்தனர். மீண்டும் மாநகராட்சி அதிகாரிகளின் அலட்சிய போக்கால் மீண்டும் பொது கழிப்பிட பாதையில் ராட்டி தட்டுவதையும், சாணி-ஐ போட்டு ரோட்டை ஆக்கிரமிப்பை செய்தும், குப்பை-ஐ கொட்டியும், ரோட்டில் மனித மலம் கழித்தும் இப்பகுதி மக்கள் செய்து வருகின்றார்கள்.

2) மாநகரரட்சி குப்பை வண்டி வரும், மக்கிய குப்பை மக்காத குப்பை என பிரித்து, வீட்டில் வந்து வாங்கி செல்வார்கள். ஆனால் அக்குப்பையை பற்றியோ, சுகாதார சீர்கேட்டை பற்றியோ அதிகாரிகளுக்கு அக்கரை இல்லை. இப்பகுதியை வந்து பார்ப்பதும் இல்லை. துப்புரவு ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர் எவரும் இப்பகுதிக்கு வருவது இல்லை என்ற புகாரின் அடிப்படையில் இங்கு உள்ளதை பார்வையிட்டு சென்றது மட்டும் தான். அதன் பின் வருவது கிடையாது. மாநகராட்சி வாட்ஸ் ஆப்க்கும், போடும் மனுவுக்கும் நடவடிக்கை இல்லை. இதற்கு காரணம், மாநகராட்சியின் உயர் அதிகாரியின் அலட்சிய போக்கே. இதனால், அருகில் இருக்கும் பொதுமக்கள் ஆகிய நாங்கள் பாதிக்கப்படுகின்றோம். சுகாதார சீர்கேடும், சாணியை போடுவதால் இரவில் வண்டுகள் வருகின்றது.

3) அய்யா அவர்கள் இம்மனுவை கனிவுடன் பரிசீலனை செய்து, பழைய மாநகராட்சி 60 வார்டு ஆளுமையில் உள்ள திரு உதவி ஆணையர், கோ. அபிஷேகபுரம் கோட்டம், திருச்சி அவர்களுக்கு இம்மனுவை அனுப்பி, அலட்சிய போக்கை கைவிட வைத்து, பொது கழிப்பிடம், பொது கழிப்பிட பாதை, போன்றவற்றில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றியும், ரோட்டில் சாணியை கொட்டி, ராட்டி தட்டி விற்கும் தொழில் உள்ளவர்களை கண்டித்தும், அதை நிரந்தரமாக தடை செய்தும் குப்பை கொட்டுபவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவும் (மாநகராட்சி சட்டத்தில்) சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர் ஆகியோர் தினமும் ஆய்வு செய்ய உத்தரவு இட்டும் நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன்.

4) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 7.2.2022 நாளிட்ட கடிதம் மூலம் உதவி ஆணையர், கோ. அபிஷேகபுரம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 22.03.2021 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

"உள்ளாட்சி முறைமன்ற நடுவன் ஆணையரின் அறிவுறுத்தலின்படி புகார்தாரர் திரு. ஷேக்தாவூத் குறிப்பிட்ட இடமானது உதவி ஆணையர், இளநிலை பொறியாளர் மற்றும் சுகாதார ஆய்வாளர் அவர்களால் கூட்டாக நேராய்வு செய்யப்பட்டது. புகார்தாரர் குறிப்பிட்டுள்ளவாறு, மேற்குறிப்பிட்ட இடத்தில் தேவையற்ற மணல் மற்றும் மாட்டு சாணத்தை மனுதாரரின் வீட்டில் அருகில் கொட்டி குப்பை கூளங்களாக வைத்து சுகாதாரமற்ற முறையில் பயன்படுத்தி வருவதாக நேராய்வில் அறியப்பட்டது. எனவே அப்பகுதியினை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டது.

மேலும் அப்பகுதிமக்களுக்கு சம்மந்தப்பட்ட பாதையில் எவ்வித அசுத்தமும் செய்யக்கூடாது எனவும் அவ்விடத்தில் பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிப்போர் மீது தமிழ் நாடு அரசு பொது சுகாதார சட்டம்-1939ன்படி, மேல் நடவடிக்கை தொடரப்படும் எனவும் பொதுமக்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் மனுவில் உள்ள கழிப்பிடம் ஏற்கனவே ஒரு சுய உதவிக்குழுவால் 2015-ம் ஆண்டு பராமரிப்புக்கு விடப்பட்டது. அப்பகுதி மக்களின் போதுமான ஒத்துழைப்பு இல்லாததால் பராமரிப்பு செய்த சுய உதவிக்குழு வெளியேறியது. தற்சமயம் சுய உதவிக்குழு ஏதும் பராமரிக்காததால் செப்டிக்டேங்க் செல்லும் பாதையில் அடைப்பு ஏற்பட்டு, கழிப்பறை கோப்பைகள் நிரம்பி வழிந்து மக்கள் பயன்படுத்த இயலா நிலைக்கு மாறியுள்ளது. மனுதாரரின் புகார் மனுவினை அடுத்து, நேராய்வு மேற்கொள்ளப்பட்டு அப்பகுதி பொதுமக்களிடம் கழிப்பறையை சுகாதாரத்துடன் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு அக்கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மராமத்து பணிகள் முடிவுற்றவுடன் அப்பகுதியிலுள்ள சுய உதவிக்குழுவிற்கு பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் மற்றும் உதவி ஆணையர், கோ. அபிஷேகபுரம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆகியோர் 9.3.2022 அன்று விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 23.2.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் திரு. S. கார்த்திக் (எ) ஷேக்தாவூத் 9.3.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 60வது வார்டு, அரவானூர் கழிப்பிடப் பாதை முழுவதும் பயன்படுத்த முடியாமல் குப்பை மற்றும் கழிவுகளால் நிரம்பியுள்ளது. மேலும், மாநகராட்சியால் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் மட்டுமே வீடுகளிலிருந்து வாங்கி செல்கின்றனர். கழிப்பிடப் பாதையை ஆக்கிரமித்து மாட்டுச் சாணத்தால் வறட்டி

தட்டப்படுவதால், பொது மக்களால் பொதுக்கழிப்பிடத்திற்கு செல்லமுடிவதில்லை. மேலும் பொதுக் கழிப்பிடத்தின் பின்பக்க சுவரை சில சமூகவிரோதிகள் உடைத்து அந்த இடத்தை திறந்தவெளி கழிப்பிடமாக உபயோகப்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து மாநகராட்சி அலுவலகத்தில் பலமுறை புகார்கள் அளித்தும், மாநகராட்சியால் மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. அங்குள்ள பொதுப்பாதையில் குப்பைகளை குவித்து கொளுத்துவதாலும் அங்கு மாசு நிறைந்து சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன. மேலும், ஒவ்வொரு தெருவிலும் நடந்து செல்ல இயலாவண்ணம் தெரு பாதையை ஆக்கிரமிப்பு செய்து மணல், செங்கல், மாட்டு கொட்டகை என தெருவை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். எனவே, மேற்கண்ட பாதையை சுத்தம் செய்யவும், குப்பைகளை குப்பைகள் தேங்கியுள்ள இடத்திலேயே எரிக்காமல் உடனுக்குடன் அகற்றிடவும், கழிப்பிடத்திற்கு பின்னால் திறந்தவெளி கழிப்பிடமாக சிலர் உபயோகிப்பதை தடுத்திடவும், மேலும் அங்குள்ள பாதை ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் நடவடிக்கை எடுக்குமாறும் இதனை மாநகராட்சி அலுவலர்களால் அடிக்கடி கண்காணித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

7) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ. அபிஷேகபுரம் கோட்ட உதவி ஆணையர் திரு. ச. செல்வபாலாஜி 9.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ. அபிஷேகபுரம் கோட்டம் வார்டு 60க்குட்பட்ட அரவானூர் பொதுக் கழிப்பிடம் தற்போது சுத்தம் செய்யப்பட்டு பொதுமக்களின் உபயோகத்தில் இருந்து வருகிறது. இது தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், மனுதாரர் கூறியுள்ளவாறு மேற்கண்ட இடத்தில் மணல் மற்றும் மாட்டு சாணத்தை சுகாதாரமற்ற முறையில் சிலர் பயன்படுத்தி வருவதை நேராக கண்டறியப்பட்டு, அப்பகுதியை சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதே போன்று மேற்கண்ட இடத்தில் மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பை ஆகியவற்றை தரம் பிரித்து எடுத்துச்செல்லப்படுகின்றன. மேற்கண்ட பகுதியில் உள்ள கழிப்பிடத்தின் பின் சுவற்றை உடைத்து சமூகவிரோதிகள் சிலர் சமூகவிரோத செயல்களிலும், திறந்தவெளி கழிப்பிடமாகவும் உபயோகப்படுத்தி வருகின்றனர். இது தொடர்பாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டு, மேற்கண்ட நிகழ்வுகள் தொடராமல் இருக்க அங்குள்ளவர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாநகராட்சியைச் சேர்ந்த சுகாதார ஆய்வாளரிடம் தெரிவித்து, அங்கு புகார் ஏதும் எழாவண்ணம் தொடர்ந்து கண்காணித்து, அங்கு சேரும் குப்பைகளை எரிக்காமல் உடனுக்குடன் அகற்றிட தேவையான நடவடிக்கை உடனே எடுக்கப்படும் என்றும், இது போன்ற புகார்கள் அப்பகுதியில் வராமலிருக்க தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

8) உதவி ஆணையர், கோ. அபிஷேகபுரம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனது 9.3.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"முறையீட்டு மனுதாரர் குறிப்பிடப்பட்ட பொதுக்கழிப்பிடப்பகுதி கள ஆய்வு செய்யப்பட்டது கள ஆய்வின் முடிவுகள் கீழ்கண்டவாறு :

| வ.எண். | கழிப்பிடத்தின் அமைவிடம் | கழிவறைகள் | | | குளியல் அறைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | முதியவர் | ஆண் III | பெண் | முதியவர் |
| (i) | (ii) | (iii) | (iv) | (v) | (vi) | (vii) | (viii) |
| 1 | அரவானூர் | 8 | 8 | 3 | 0 | 3 | 0 |

- ❖ மேற்கண்டவாறு கழிவறைகள் மற்றும் குளியல் அறைகள் அமைத்துள்ளன. மேற்படி கழிவறைகளில் பீங்கான் கோப்பைகள், தண்ணீர் குழாய்கள், மின் விளக்குகள் கதவுகள் மற்றும் மின் மோட்டார்கள் நல்ல நிலையில் உள்ளது.
- ❖ மேலும், கழிவறையில் கழிவுகள் பாதுகாப்பான முறையில் செப்டிக் டேங்க் சுகாதார முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- ❖ குளியல் அறையில் இதே போன்று தண்ணீர் குழாய்கள், மின் விளக்குகள் நல்ல நிலையில் உள்ளது.
- ❖ மேலும் சுகாதார அலுவலரின் ஆய்வின் மூலம் தினசரி 50 பெண்களும் சுமார் 50க்கும் மேற்பட்ட ஆண்களும் இக்கழிப்பறையினைப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர் என்கிற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இக்கழிப்பிடம் தற்சமயம் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கழிப்பறை மேலாண்மையின் ஒரு பகுதியான சுகாதாரப் பணிகளில் மற்றும் சேவையில் தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் நிறைந்த ‘கிராமாலயா’ அமைப்பின் தொண்டு வழிகாட்டுதலுடன் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் நடத்துவதற்கு கலந்தாலோசனை நடத்தப்பட்டு வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.

9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், உதவி ஆணையர், கோ. அபிஷேகபுரம் கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களது வாக்குமூலம் மற்றும் 9.3.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் City health officer (CHO) ஆகியோருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

- மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் போதுமான அளவுக்கு துப்புரவு பணியாளர்களை கொண்டு காலை மற்றும் மாலை ஆகிய இருவேளையிலும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை ஆகியவற்றை தரம் பிரித்து வாங்கப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும்.
- துப்புரவு பணியாளர்களால் சேகரிக்கப்படும் குப்பைகளை அங்கேயே எரிக்காமல் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
- வாரம் ஒருமுறை அப்பகுதியில் ஒருங்கிணைந்த துப்புரவு பணி (Mass cleaning work) மேற்கொள்ளப்படவேண்டும்.
- தமிழ்நாடு அரசு பொது சுகாதார சட்டம் 1939ன்படி அப்பகுதியில் உள்ள சாலைகளை ஆக்கிரமித்து சாணத்தை வறட்டியாக தட்டி சுகாதார சீர்கேடு ஏற்படுத்துபவர்கள் மீதும் மற்றும் பொது சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிப்போர்களுக்கு அறிவிப்பு கொடுத்து சுகாதார சீர்கேடு ஏற்படா வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சுகாதார ஆய்வாளர், திறந்தவெளியை கழிப்பிடமாக உபயோகப்படுத்துவதை (open defecation) தடுத்திட பொதுமக்களிடம் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
- பொது கழிப்பிடத்தை சுத்தமாக பராமரிக்க மகளிர் சுய உதவி குழுக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். குடிநீர், மின்சாரம் மற்றும் கழிப்பிடங்கள் சுகாதாரமானமுறையில் உள்ளதா என சுகாதார ஆய்வாளர் அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும் புகார் மனு கொடுத்து ஒரு வருட காலமாகியும் எந்தவிதமான நடவடிக்கையும் மாநகராட்சியால் எடுக்காமல் கால தாமதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டதை அறியமுடிகிறது. துப்புரவு பணி என்பது மிக இன்றியமையாத பணியாகும். துப்புரவு சம்பந்தமான புகார் மனு மீது ஒரு

வருட காலம் நடவடிக்கை எடுக்காத சுகாதார ஆய்வாளர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு ஆய்விற்கு செல்வதில்லை என்பதையும், இதிலிருந்து அவரது கடமையை செய்ய தவறியுள்ளார் என்பதையும் அறியமுடிகிறது. ஆகவே சம்மந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. S. கார்த்திக் (எ) ஷேக் தாவூத்,
   எண்.1/145, புதுக்காலனி,
   அரவானூர், மருதாண்டாக்குறிச்சி அஞ்சல்,
   திருச்சிராப்பள்ளி – 620 102.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.
   திருச்சிராப்பள்ளி.
3. உதவி ஆணையர் ,
   கோ. அபிஷேகபுர கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   புத்தூர், திருச்சிராப்பள்ளி – 620 017.
4. இணை இயக்குநர்,
   ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.